இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,224, JANUARY 10, 1908.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[Rules under the Poisons Ordinance, 1901.]

## 1901 ம் ஆண்டு நச்சுப்பதார்த்தச் சட்டத்துக்கமைய விதிக்கப்பட்ட விதானங்கள்.

1. இவ்விதானங்களில் சொற்றொடர்பின்படி வேறு அர்த்தங்கொள்ளக்கூடியதாயிருந்தாலன்றி, "கொக்கேன்" என்ற சொல்லின் அர்த்தம், கொக்கேன் உள்ள பாகங்களையும், கொக்கேன் உப்புச்சேர்ந்த பாகங்களையும், அவைகளிரண்டுஞ்சேர்ந்த பாகங்களையும் உட்படுத்துவதாகும். வைத்தியர் என்ற சொல்லு 1905 ம் ஆண்டு 2 ம் இலக்கச் சட்டத்துக்கமையப் பதிவுசெய்யப்பட்ட வைத்தியரைக் கருதுவதாகும்.

2. சட்டத்தின் 4 ம் (நான்காம்) பிரிவுக்கமைய உத்தரவுப்பத்திரமெதையும் கொடுக்கும்பொழுது, அவ்வுத்தரவுப் பத்திரத்திலே கொடுக்கப்படும் உரித்திலிருந்து, கொக்கேன் விற்கும் உரித்தை அரசாட்சி ஏசன்றரானவர் நீக்கிவிடலாம். அவ்விதம் நீக்கிவிடப்பட்ட உத்தரவுப்பத்திரத்தின்பேரால் எத்தொகையளவாயினும் கொக்கேனை விற்றல்தான், விற்பதற்கு வெளியேவைத்தல்தான், விலைக்குக்கொடுத்தல்தான், அவ்வுத்தரவுப்பத்திரம் பெற்றவருக்கு நியாயமுறையாகாது.

3. கொக்கேனையும் சேர்த்து, நச்சுப்பதார்த்தங்கள் சில்லறையில் விற்பதற்கு உத்தரவுப்பத்திரம்பெற்ற எவரொருவரும் தனக்கறிமுகமில்லாதவரும், அல்லது தனக்கு அறிமுகமுள்ள ஒருவரால் சமூகப்படுத்தப்படாதவருமாகிய எவரொருவருக்காவது கொக்கேனை சில்லறையில் விற்கப்படாது.

4. உத்தரவுப்பத்திரம்பெற்ற எவரொருவரும், காய்ந்திருக்குமாயின் ஆறு கிறெயினுக்கு மேற்பட்டாவது, அல்லது நீர்ப்பதார்த்தமாய்க் கலந்திருப்பதாயின் அதில் பத்துக் கிறெயினுக்கு மேற்பட்ட கொக்கேனுள்ள கலப்பையாவது ஒரேயாளுக்கு ஒரே நாளில் அந்த ஆள் யோக்கியதைபெற்ற வைத்தியராய் அல்லது இரசவாதியாய், அல்லது நச்சுப்பதார்த்தங்களை விற்பதற்கு உத்தரவுப்பத்திரம்பெற்ற மருந்து விற்பவராய் இருந்தாலொழிய, சில்லறையில் விற்கப்படாது.

5. கொக்கேனையுஞ்சேர்த்து நச்சுப்பதார்த்தங்கள் சில்லறையில் விற்க உத்தரவுப்பத்திரம்பெற்ற எவரொருவரும் 1 (ஒரு) அவுன்சு நிறைக்கு மேற்பட்ட கொக்கேன் கையிருப்பில் வைத்திருத்தல் கூடாது.

6. ஒரு வைத்தியரின் பட்டோலையின்படி மருந்துகலப்பவனால் அல்லது இரசவாதியால் அல்லது மருந்து விற்பவனால் கலந்து கொடுக்கப்பட்ட யாதேனும் ஒரு மருந்தின் சரக்குகளில் ஒன்றாகச் சேர்ந்திருக்கும் கொக்கேனுக்கு மேற்போந்த விதானங்களெல்லாம் அமைவனவல்லவாம். ஆயினும், கொக்கேன் சேர்ந்திருக்குமாயின் பட்டோலைகளெல்லாம் பட்டோலைப் புஸ்தகமென்று அதற்காக வைத்திருக்கப்படும் புஸ்தகமொன்றில் பதியப்பட்டிருத்தல் வேண்டும். அப்புஸ்தகத்தில் அதை விலைக்குவேண்டிய ஆளின் பெயரும் அப்பட்டோலை கொடுத்த வைத்தியரின் பேரும் எழுதப்படல் வேண்டும். பட்டோலையின்படி கொடுக்கப்பட்ட மருந்து வைத்திருக்கும் பாத்திரத்தில் அதை விற்றவருடைய பெயரும் விலாசமும் ஒட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

7. கொக்கேனையுஞ்சேர்த்து நச்சுப்பதார்த்தங்களை தொகையில் விற்பதற்கு உத்தரவுப்பத்திரம்பெற்ற எவரொருவரும் கொக்கேனைத் தொகையாய் விற்றல் கூடாது.

புறனடை :

(a) தொகையிலாவது சில்லறையிலாவது கொக்கேனையுஞ்சேர்த்து நச்சுப்பதார்த்தம் விற்க உத்தரவுப்பத்திரம் பெற்றவர்களுக்கும்

(b) யோக்கியதை பெற்றுள்ள வைத்தியருக்கும்

தொகையில் விற்கலாம்.

8. கொக்கேனையுஞ்சேர்த்து நச்சுப்பதார்த்தங்களை தொகையில் விற்க உத்தரவுப்பத்திரம்பெற்ற எவரொருவரும் :—

(a) காய்ந்த கொக்கேனில் ஒரு அவுன்சு நிறைக்குக் குறைந்த தொகையில் கொக்கேனை எவரொருவருக்கும் விற்கப்படாது.

(b) சில்லறை வியாபாரிகளுக்குத்தான், யோக்கியதை பெற்றுள்ள வைத்தியர்களுக்குத்தான், ஒவ்வொரு அவுன்சு கணக்காயன்றி கொக்கேனை விற்றல் கூடாது.

(c) கொக்கேனையுஞ்சேர்த்து நச்சுப்பதார்த்தங்கள் தொகையில் விற்க உத்தரவுப்பத்திரம்பெற்ற ஆட்களுக்கன்றி மற்றெவரொருவருக்கும் ஒரு அவுன்சுக்கு மேற்பட கொக்கேன் விற்றல் கூடாது.

9. தொகை வியாபாரிக்கென்று ஏற்றுமதிசெய்யப்பட்டு இத்தீவில் வந்து பதிக்கப்படும் கொக்கேனெல்லாம் இரேகில் கொக்கேனென்று பிரதிஞ்ஞைபண்ணப்படல் வேண்டும். பின்வரும் மாதிரியான உத்தரவைக்கொண்டே இரேகிலிருந்தாவது, தபாற் கந்தோரிலிருந்தாவது அது எடுத்துக்கொண்டு போகப்படல் வேண்டும் :—

கொக்கேன் உத்தரவுப்பத்திரம் இருப்புடாப்பு.

இலக்கம் ———.
மனுப்பத்திரத்தின் தேதி ———.
மனுக்கேட்டவர் பெயர் ———.
முழு விலாசம் ———.

உத்தரவுப் பத்திரத்தின்படி கொக்கேன் விற்கப்படும் இடத்தின் குறிப்புகள் ———.

ஏற்றிக்கொண்டுபோகப்படும் கொக்கேனின் தொகை :—

——— அவுன்சு ———திறும் ———கிறேயின்

உத்தரவுப்பத்திரம் கொடுக்கப்படும் இரேகு வீட்டின் அல்லது தபால் ஆபிசின் பெயர்———.

வழங்கக்கூடிய காலம்———.

உத்தரவுப்பத்திரம் கொடுக்கும்
ஆபிசரின் கையொப்பம்.

கொக்கேன் உத்தரவுப்பத்திரம்.

190——ம் ஆண்டு ———மீ——ந் தேதி.
இலக்கம் ———.

———இடத்தில்

கொக்கேனை தொகையில் விற்கத் தத்துவம் பெற்ற ——— என்பவருக்கு ——— இடத்திலுள்ள இரேகு வீட்டிலிருந்து அல்லது தபால் ஆபிசிலிருந்து
——— அவுன்சு ——— திறும் ——— கிறெயின்

நிறையுள்ள கொக்கேனை அவருடைய மேற்கூறிய இடத்துக்கு ஏற்றிக்கொண்டுபோக உத்தரவு இந்தப்பத்திரத்தால் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தப்பத்திரத்தால் ஏற்றிக்கொண்டுபோகும்படி உத்தரவுகொடுக்கப்பட்ட அத்தொகை மருந்துடன் இப்பத்திரமும் கொண்டுபோகப்படவேண்டும்.

இப்பத்திரம் ——— தேதி —— மணி நேர வரைக்கும் வழங்கக்கூடியது. இப்பத்திரம் கொக்கேன் விற்கப்படும் இடத்தில் கவனமாய் வைத்திருக்கப்படல் வேண்டும்.

உத்தரவுப்பத்திரம் கொடுக்கும்
ஆபிசரின் கையொப்பம்.

10. கொக்கேனையுஞ்சேர்த்து நச்சுப்பதார்த்தங்கள் தொகையில் விற்பதற்கு உத்தரவுப்பத்திரம் கேட்கும் எவரும் தான் கொக்கேனை வைத்துவிற்க எண்ணியிருக்கும் இடத்தை இதன் கீழ்க் காட்டப்பட்டிருக்கும் வண்ணம் தமது மனுப்பத்திரத்தில் விபரமாய்க் காட்டல்வேண்டும்:—

| தெரு, அல்லது கதவின் இலக்கம், அல்லது வேறு விபரங்கள். | எல்லை. | | | | குறிப்புகள். |
|---|---|---|---|---|---|
| | வடக்கு. | கிழக்கு. | தெற்கு. | மேற்கு. | |
| | | | | | |

மேலேசொன்ன விதமாய் உத்தரவுப்பத்திரம் பெறும் எவரும் அப்படிப்பட்ட இடத்தில் கொக்கேனை வைத்திருத்தலேயன்றி, பிறிதிடத்தில் வைத்திருத்தல் கூடாது.

11. கொக்கேனையுஞ்சேர்த்து நச்சுப்பதார்த்தங்கள் தொகையில் விற்கும் ஒவ்வொருவரும் கொக்கேனை நாளுக்குநாள் விற்ற தொகையை சரியாய்க் காட்டும் புஸ்தக மொன்றை பின்வரும் மாதிரியாய் எழுதிவைத்துக்கொள்ளல் வேண்டும்:—

| தேதி. | நேற்றுவிற்ற பின் மிகுதமாயிருந்த தொகை. | இன்று வேண்டிய தொகையும் யாரிடம் வேண்டியதென்பதும். | முழுதாய்க் கணக்குக் காட்டவேண்டிய தொகை. | இன்று விற்ற தொகை. | விலைக்கு வாங்கினவரின் பெயர். | விலாசம். | மிகுதமாய் இருப்பிலிருக்கும் தொகை. | குறிப்புகள். |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| | அவு. கிறே. | அவு. கிறே. | அவு. கிறே. | அவு. கிறே. | | | அவு. கிறே. | |

12. 10ம் விதானத்தில் சொல்லிய புஸ்தகம் உதவிச் சுப்பிறின்றென்டென்ற் தரத்துக்குக் கீழ்ப்படாத பொலிசு உத்தியோகஸ்தரெவரும் எந்நேரத்திலாயினும் போய்ப் பரிசோதித்துப்பார்க்கக் கொடுக்கப்படல்வேண்டும். அவ்வுத்தியோகஸ்தரானவர் இருப்பிலிருக்கும் கொக்கேனின் தொகை சரியோவென்று பார்த்தல் வேண்டும்.

## LAND SALES.

### காணி விற்பனவுகள்.

No. 545, N. P.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1907 ம் ஆண்டு மார்கழிமீ 24 ந் தேதி.

1908 ம் ஆண்டு மாசிமாதம் 25 ந் தேதி, 11 மணியளவில் தன் ஆபிசில் வடமாகாணத்து கவற்ணமேந்து ஏசென்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும்.

12 காணித்துண்டுகள், வடமாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் தீவு பகுதியிலிருக்கின்றது.

படம் இலக்கம் 2,971. உரித்தாளி—அரசாட்சி. குறிச்சி—கரம்பன்.
காணியின் பெயர்—தணவில், உயாத்தணவில், பொற்றன்தணவில்.

| காணித்துண்டின் இல. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | று. | பே. | ஏக்கரொன்றுக்கு பாணிப்பு விலை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 11017 | — | தென்னைக்குத்தக்க | 1 | 2 | 0 | 15 |
| 11018 | ஒழுங்கைக்காக பொதுப்பாவிப்புக்கு விடப்பட்ட நிலம் | — | 0 | 0 | 4 | — |
| 11019 | — | தென்னைக்குத்தக்க | 2 | 1 | 32 | 15 |
| 11020 | ஒழுங்கைக்காகப் பொதுப்பாவிப்புக்குவிட்ட நிலம் | — | 0 | 0 | 8 | — |
| 11021 | — | நெல்வயலுக்குத்தக்க | 6 | 1 | 10 | 15 |
| 11022 | ஒழுங்கைக்காகப் பொதுப்பாவிப்புக்குவிட்ட நிலம் | — | 0 | 0 | 32 | — |
| 11023 | — | தென்னைக்குத்தக்க | 1 | 0 | 6 | 15 |
| 11024 | ஒழுங்கைக்காகப் பொதுப்பாவிப்புக்குவிட்ட நிலம் | — | 0 | 0 | 28 | — |
| 11025 | — | நெல்லுக்குத்தக்க | 16 | 1 | 36 | 15 |
| 11026 | ஒழுங்கைக்காகப் பொதுப்பாவிப்புக்குவிட்ட நிலம் | — | 0 | 1 | 26 | — |
| 11027 | — | நெல்லுக்குத்தக்க | 15 | 3 | 16 | 15 |
| 11028 | தெருவுக்கு பொதுப்பாவிப்புக்குவிடப்பட்ட நிலம் | — | 1 | 0 | 28 | — |

இந்தக்காணிகளைப்பற்றி வேறே காரியங்கள் அறியவேணுமாகில் கவுண்மேந்து ஏசன்று இடமும் படங்களைப்பற்றி அளவு கந்தோரின் பெரியதுரையிடமும் அறிந்துகொள்ளலாம்.

மகோத்தமரவர்களின் கட்டளைப்படி,
ஊ். ஸிவ்வோட்,
இராசாங்க லிகிதர்.

---

No. 546, N. P.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
கொழும்பு, 1908 ம் ஞு தைமீ 7 ந் தேதி.

1908 ம் ஆண்டு பங்குனிமாதம் 10 ந் தேதி, செவ்வாய்க்கிழமை காலமே 11 மணியளவில் தன் ஆபிசில் வட மாகாணத்து கவற்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொத்தப்பிரகாரம், ஏலத்திற் கூறி விற்கப்படும்.

10 காணித்துண்டுகள், வடமாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் யாழ்ப்பாணம், தீவு, பூனகரி, தென்மருட்சி, வலிகாமம் கிழக்கு முதலிய பகுதிகளிலிருக்கின்றன.

படம இலக்கம் 3,382. உரித்தாளி—அரசாட்சி.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | காணியின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | று. | பெ. | அக்கரொன்றுக்கு பாணிப்பு விலை. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 12405 | வண்ணார்பண்ணைகிழக்கு | பத்திரியடி | பாவிப்பில்லாதஒழுங்கை | 0 | 0 | 3 | 4000 |
| 12406 | ஷை | நாதன்சாட்டி | ஷை | 0 | 0 | 6 | 4000 |
| 12407 | ஷை | கட்டாவரம் புலம் | ஷை | 0 | 0 | 7 | 400? |
| | | படம இலக்கம் 3,195. உரித்தாளி—அரசாட்சி. | | | | | |
| 11851 | நாரந்தனை | பூட்டுக்குத்திக்கலடு | வயலுக்குத்தக்க, யாழ்ப்பாணம் சேவிறியல்பிள்ளை மனுவல்பிள்ளையும மறுபேரும கூட்டிச்சேர்த்தது | 7 | 0 | 8 | 16 |
| | | படம் இலக்க 3,196. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | |
| 11865 | ஷை | பெரியகாடு | தோட்டத்துக்குதக்க | 13 | 2 | 20 | 16 |
| | | படம் இலக்கம் 2,971. உரித்தாளி—அரசாட்சி. | | | | | |
| 10969 | கரம்பன் | கிணத்தடிதணவில் அன் தணவில் | தென்னைக்குத்தக்க | 18 | 0 | 0 | 15 |
| | | கேள்விக்காரன்—கே. சிவகுரு. படம் இலக்கம் 3,369. | | | | | |
| 12374 | ஆலன்குளம் | யார்க்காடு | தோட்டத்துக்குத்தக்க | 0 | 3 | 32 | 20 |
| 12375 | ஷை | ஷை | ஷை | 1 | 0 | 12 | 15 |
| | | படம் இலக்கம் 3,306. | | | | | |
| 12229 | சரசாலை | தில்லன்குளி | கே. முருகேசு கூட்டிச்சேர்த்தது | 0 | 0 | 8 | 72 |
| | | படம் இலக்கம் 3,050. | | | | | |
| 11339 | கோப்பாய்தெற்கு | அடிச்சேரி | பாவிப்பில்லாத தெரு | 0 | 0 | 30 | 500 |

இக்காணிகளைப்பற்றி வேறே காரியங்கள் அறியவேணுமாகில் கவுண்மேந்து ஏசன்று இடமும் படங்களைப்பற்றி அளவுகந்தோரின் பெரிய துரையிடமும் அறிந்துகொள்ளலாம்.

மகோத்தமர் அவர்களினது கட்டளையின்படி,
ஊ். ஸிவ்வோட்,
இராசாங்க லிகிதர்.

---

No. 547, N. P.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1908 ம் ஞு தைமீ 7 ந் தேதி.

1908 ம் ஆண்டு பங்குனிமாதம் 3 ந் தேதி, செவ்வாய்க்கிழமை காலமே 11 மணியளவில் தன் ஆபிசில் வட மாகாணத்து கவற்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும்.

18 காணித்துண்டுகள், வட மாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் வலிகாமம் வடக்குப் பகுதியிலிருக்கின்றது.

படம் இலக்கம் 2,504. குறிச்சி—ஏளாலை. உரித்தாளி—அரசாட்சி.

| காணித்துண்டின் இல. | காணிப் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | று. | பே. | அக்கரொன்றுக்கு பாணிப்பு விலை. ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 8916 | நெடுங்கேணியும் சதையன் வயலும் | நெல்வயல், உலகன்பெண் பொன்னுச்சியும் மறுபேரும் கூட்டிச்சேர்த்தது | 0 | 2 | 18 | 250 |
| 8917 | அம்பலம் | தோட்ட நிலம், சண்முகம் அப்பாக்குட்டியும் மறுபேரும் கூட்டிச்சேர்த்தது | 0 | 0 | 2 | 160 |

| காணித்துண்டின் இல. | காணிப் பெயர். | விவரம். | விசாலம். ஏ. ரூ. பே. | அக்கரொன்றுக்கு பாணிப்பு விலை. ரூ. |
|---|---|---|---|---|
| 8918 | வெராவரை | புகையிலைச் செய்கைக்குத்தக்க தரிசு நிலம் | 0 0 5 | 200 |
| 8919 | ஷை | புகையிலைத்தோட்டம், சங்கரப்பிள்ளை பெண் சின்னட்டியும் மறுபேரும் கூட்டிச் சேர்த்தது | 0 0 16 | 200 |
| 8920 | செருடன்வயல் | நெல்வயல், சிதம்பரிமுருகரும் மறுபேரும் கூட்டிச்சேர்த்தது | 0 0 8 | 200 |
| 8921 | சித்தனுவத்தை | நெல்வயல், நாகர் வீரகத்தியும மறுபேரும கூட்டிச்சேர்த்தது | 0 0 5 | 80 |
| 8922 | வேம்வெம்பத்தனை | பெரியதம்பி கைம்பெண் சிவகாமனும் மறுபேரும கூட்டிச்சேர்த்தது | 0 0 15 | 30 |
| 8923 | வேம்வெம்பத்தனை | மேட்டுநிலம், அதில் பனைமரம் நிற்கிறது | 0 0 28 | 160 |
| 8924 | குளக்கரைக்கலட்டி | மேட்டுத் தரிசுநிலம் | 0 0 1 | 30 |
| | படம் இலக்கம் 139. குறிச்சி—சுன்னாகம். | உரித்தாளி—வைத்திலிங்கம் பெண் தங்கமுத்து. | | |
| 3 | சிவிலனை | நெல்வயல் | 1 0 10 | 720 |
| | | உரித்தாளி—சிதம்பரி நாகமணி. | | |
| 4 | சிவிலனை | நெல்வயல் | 1 0 4 | 720 |
| | | உரித்தாளி—கொத்தன் காத்திகேசனும் மறுபேரும். | | |
| 5 | சிவிலனை | நெல்வயலும் தோட்டமும் | 2 0 28 | 480 |
| | | குறிச்சி—கந்தரோடை. உரித்தாளி—சி. அம்பலவாணர். | | |
| 10 | திடல் | தோட்டம் | 0 3 35 | 320 |
| 11 | திடல் | ஷை | 0 0 28 | 320 |
| 12 | திடல் | ஷை | 0 1 25 | 320 |
| | | உரித்தாளி—முத்துக்குமாரு கந்தையாவினுடைய உருத்தாளர். | | |
| 13 | திடல் | தோட்டம் | 0 1 38 | 80 |
| | | உரித்தாளி—சின்னத்தம்பி கைம்பெண் சேதுப்பிள்ளை. | | |
| 14 | திடல் | தோட்டம் | 0 1 11 | 80 |
| | | உரித்தாளி—கதிரேசு ஐயர் காத்திகேசு ஐயர். | | |
| 15 | திடல் | தோட்டம் | 0 0 17 | 80 |

இக்காணிகளைப்பற்றிய வேறே காரியங்கள் அறியவேணுமாகில் கவுன்மேந்து ஏசன்று இடமும் படங்களைப்பற்றி அளவுகந்தோரின் பெரியதுரையிடமும் அறிந்துகொள்ளலாம்.

மகோத்தமரவர்களின் கட்டளைப்படி,
கியூ கிளிவ்வோட்,
இராசாங்க லிகிதர்.

---

No. 548, N. P.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
கொழும்பு, 1908 ம் ஹூ தையீ 8 ந் தேதி.

1908 ம் ஆண்டு பங்குனிமாசம் 4 ந் தேதி, மன்னாரில் தன் ஆபிசில் வடமாகாணத்து மன்னார் உதவி கவர்ன்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும்.

9 காணித்துண்டுகள், வடமாகாணத்து மன்னார் டிஸ்திறிக்கின் மாந்தை வடக்கு பகுதியிலிருக்கின்றது.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. ரூ. பே. |
|---|---|---|---|---|
| | | படம் 15. மாந்தை வடக்கு. உரித்தாளி—அரசாட்சி. | | |
| 3a | வேளாகுளம் | மனுவேல் சலமோன் | வெண்காணி | 4 2 8 |
| 1a | ஷை | ஷை | ஷை | 1 2 17 |
| | | படம் 3,398. மாந்தை தெற்கு. உரித்தாளி—அரசாட்சி. | | |
| 12462 | தள்ளாடி | வேலுப்பிள்ளை சின்னையா | காடு | 0 2 20 |
| | | படம் 23. உரித்தாளி—அரசாட்சி. | | |
| 12a | கல்மோட்டை | பி. செ. மீராமெய்யதீன் | வெண்காணி | 2 2 20 |
| | | படம் 3,400. முசலி தெற்கு. உரித்தாளி—அரசாட்சி. | | |
| 12468 | காடிக்குளி | மரியானு மிக்கேல்சாய்வ | காடு | 10 1 34 |
| 12470 | ஷை | ஷை | காடு | 1 3 15 |
| 12472 | ஷை | சவரிசந்தான் குருசு | காடு | 2 1 26 |
| 12473 | ஷை | சந்தியாகு அந்தோனி கூஞ்ஞு | காடு | 4 0 14 |
| 12475 | ஷை | விசேந்தி அந்தோனி கூஞ்ஞு | காடு | 1 3 28 |

பாணிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 15.

இந்தக்காணிகளைப்பற்றி வேறே காரியங்கள் அறியவேணுமாகில் கவன்மேந்து ஏசன்று இடமும் படங்களைப்பற்றி அளவுகந்தோரின் பெரியதுரையிடமும் அறிந்துகொள்ளலாம்.

மகோத்தமர் அவர்களினது கட்டளையின்படி,
ஹியு கிளிவ்வோட்,
இராசாங்க லிகிதர்.

---

[Postponement of Land Sale, Trincomalee.]

திருக்கோணமலை கச்சேரியில் 1908 ம் ஆண்டு தைமாதம் 15 ந் தேதி நடைபெறுமென்று நியமிக்கப்பட்டிருந்த காணி விற்பனவு 1908 ம் ஆண்டு தைமாதம் 16 ந் தேதி நடைபெறுமென்று இத்தாலறிவிக்கப்படுகிறது.

திருகோணமலை கச்சேரி,
1907 ம் ஹூ மார்கழியீ 23 ந் தேதி.

ஜி. குக்ஸன்,
உதவி ஏசன்டு.

No. 1,680, N.C. P.

கொலோனியல் சக்கிரித்தார் ஆபிசில்,
கொழும்பு, 1907 ம் ஆடு மார்கழி 31 ந் உ.

1908 ம் ஆண்டு மாசிமாதம் 17 ந் தேதி, மத்தியான்னம் அனுராஜபுரத்தில் தன் ஆபிசில் வடமத்திய மாகாணத்து கவர்ணமேந்து ஏசென்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளின் குத்தகையாட்சி பின்னூற் சொல்லப்படும் பொருத்தப்பிரகாரம், ஏலத்திற் கூறி விற்கப்படும்.

15 காணித்துண்டுகள், வடமத்திய மாகாணத்து நுவரகலாவியா டிஸ்திரிக்கின் அனுராஜபுரப் பகுதியிலிருக்கின்றது.

| காணித்துண்டின் இல. | குறிச்சி | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். அ. | ரூ. | பெ. |
|---|---|---|---|---|---|---|
| | | பிளான் இலக்கம் B. S. 158. காந்தாரகோறளை. உரித்தாளி—முடி. | | | | |
| 4 | சங்கிலிக்குளம் | இ. ஆறுமுகம் | காயகறித்தோட்டம் | 0 | 0 | 22 |
| | | பிளான் இலக்கம் 2,796. கணதராகோறளை. உரித்தாளி—முடி. | | | | |
| 8783 | மிகிந்தலை | எஸ். பங்கிவி | வதுவைக்காணி | 0 | 0 | 28 |
| 8784 | ஷை | — | ரேட்டுக்குவிட்ட நிலம் | 0 | 0 | 6·R |
| | | பிளான் இலக்கம் 3,083. கடவத்கோறளை. உரித்தாளி—முடி. | | | | |
| 9839 | மகாதிவுளாவை | ஏ. டீ. சற். விஜவார்தன | தோட்டமும் வீடும் | 0 | 0 | 20 |
| | | பிளான் இலக்கம் 3,104. குஞ்சுட்டுகோறளை. உரித்தாளி—முடி. | | | | |
| 9895 | கொணுகத்தனேவ | மீராசாய்பு | தோட்டமும் வீடும் | 0 | 0 | 25 |
| 9896 | ஷை | உ. எம். காசிம் | ஷை | 0 | 0 | 18 |
| 9897 | வட்டவெவ | பி. என். கபீபு | ஷை | 0 | 0 | 18 |
| | | பிளான் இலக்கம் 3,106. நுவரகமகோறளை. உரித்தாளி—முடி. | | | | |
| 9900 | இகலதலாவை | ஏ. சந்தியாகு | தோட்டமும் வீடும் | 0 | 0 | 6·56 |
| 9901 | ஷை | — | பரந்தநிலம் | 0 | 0 | 1·37 |
| | | பிளான் இலக்கம் 3,107. கல்பேகோறளை. உரித்தாளி—முடி. | | | | |
| 9902 | வெலிமபொத்தானை | எம். என். வெல்வை | வீடும் தோட்டமும் | 0 | 0 | 12 |
| | | பிளான் இலக்கம் 3,110. கல்பேகோறளை. உரித்தாளி—முடி. | | | | |
| 9909 | வலகவித்தாவை | சீ. சிவனடியார் | வீடும் தோட்டமும் | 0 | 0 | 8 |
| | | பிளான் இலக்கம் 3,111. குஞ்சுட்டுகோறளை. உரித்தாளி—முடி. | | | | |
| 9910 | கிரிக்கொட்டியாவை | டபிள்யு. எச். அப்புகாமி | அழிந்த தோட்டம் | 0 | 1 | 16 |
| 9911 | ஷை | எம். சீயது | வீடும் தோட்டமும் | 0 | 0 | 14 |
| 9912 | ஷை | எஸ். சிலெஸ்தினகாமி | ஷை | 0 | 0 | 7 |
| 9913 | ஷை | — | ரேட்டுக்குவிட்ட நிலம் | 0 | 0 | 22·R |

பொருத்தங்கள்,

1. வருடாந்த வாடகை உள்ப்பட காணிகள் குத்தகையாக விற்கப்படும்.

2. வருடாந்த வாடகை வீதம் இப்போ ஆட்சிப்படும் காணிகளின் வாடகை வீதமாக அறவிடப்படும். அதாவது 60 அடி நீளமும் 25 அடி அகலமுமான காணிக்கு ரூபா 6, இத்துடன் காணியின் அரைவிலையான ரூபா 50 முற்பணமும் கட்ட வேண்டும்.

3. குத்தகை 30 வருஷத்துக்கிருக்கும்.

4. முதல் வருஷக் குத்தகைப்பணம் விற்பனவு நேரத்தில் கட்ட வேண்டும்.

5. குத்தகைப்பணம் கணக்கிடுவதற்கு வருஷம் தை முதலாகவும் மார்கழி 31 ந் திகதி யீறுகவும் எண்ணப்படும். ஏவ்வருஷப் பணமும் மாசி 28 ந் திகதிக்குமுன் கட்டிப்போடவேண்டியது.

6. காணி பிரசித்த பாதையை அல்லது ரேட்டை யடுத்திருக்குங்கால், அதிற் கட்டப்படும் கட்டடம் தாவாரத்தினின்று நேரே யளந்து ரேட்டின் மத்தியினின்று 40 அடிக்குள்ளாகக் கட்டப்படாது. அல்லது ரேட்டுக்கென்று நிலம் விடப்பட்டிருந்தால் அந்த நிலத்திலிருந்து 10 அடிக்குள் கட்டப்படாது.

7. மேலே காட்டிய 6 ம் பொருத்தத்தின்படி கட்டப்படும் நிலத்திலுள்ள கட்டடங்கள் நிலத்திலிருந்து குறைந்தளக்கு 2 அடி உயர்த்தப்படவேண்டும். கூரை ஓட்டால் வேயப்படவேண்டும்.

8. 6 ம் பொருத்தத்துக்குமாறுக ஒரு விதமான தட்டியாவது எவ்விதமான ஒத்தாப்பாவது கட்டப்படாது.

9. மாசி 28 ந் திகதி குத்தகைப்பணம் கட்டத்தவறினுல் அல்லது வேறெந்தக் கொந்திசுக்கும் மாறுக நடந்தால், குத்தகை யவிக்கப்பட்டு அரசாட்சி ஏசென்று காணியாட்சி யெடுப்பார்.

10. முன்னுக்கு வதுவைச்சீட்டில் ஆட்சிப்பண்ணப்படும் காணிகளுக்கு ஏலமில்லாமலும் தமக்குப் பிரியமான பொருத்தத்துக்குட்படவும் அரசாட்சி ஏசென்று காணியை முந்திய ஆட்சிக்காரனுக்கே கொடுக்கலாம். அப்படியான பொருத்தங்களை குத்தகை உறுதியில் எழுத்தில் எழுதப்படவேண்டும்.

11. குத்தகைகாரன் எந்தியாயத்தைக்கொண்டாவது தனது காணியை பங்கிட்டுக்கொள்ளக்கூடாது.

அதிபுத்தம தேசாதிபதியவர்களின்கட்டளைப்படி,
கியூ கிளிவ்வோட்,
இராசாங்க லிகிதர்.

## LAND ACQUISITION NOTICES.

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

[Udamita, Colombo District.]

1876 ம் ஆடு-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நீர்கொழும்பு ரயிலுக்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 13,370. குறிச்சி—உடாமித்தே. விவரம்—தென்னந்தோட்டம்.

| துண்டு. | காணியினது பெயர். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | பே. |
|---|---|---|---|---|---|
| 1 A | அம்பகாஹாவத்தே | பீ. கரோலிஸ்சில்வா | 0 | 0 | 9·50 |
| 2 A | டவடகாஹாவத்தே | கெ. ஜகரியம்பிரேரா | 0 | 0 | 19 |

| துண்டு. | காணியினது பெயர். | உரித்தாளியின் பெயர். | விசாலம் ஏ. ரூ. பெ. |
|---|---|---|---|
| 3 A | டெல்காஹாவத்தே | எம். செலஸ்டியான் பிரேராவும் மற்றவரும் | 0 1 35 |
| | | விவரம்—நெல்வயல். | |
| 4 A | டெல்கஹாகும்புர | எம். சேலஸ்டியான் பெரேராவும் மற்றவரும் | 0 0 1·50 |
| 5 A | டவடகாஹாகும்புரு | எம். எவினுபிரேரா | 0 0 13 |
| 6 A | ஷை | எம். கோடியனுபிரேரா | 0 0 8 |
| 7 A | அம்பகஹாகும்புரு | எம். மர்தேவிஸ்பிரேரா | 0 0 3 |
| | | விவரம்—தென்னந்தோட்டம். | |
| 8 A | டவடகாஹாவத்தே | எம். கோடியனு பிரேராவும் மற்றவரும் | 0 0 7·50 |
| 9 A | ஷை | எம். மர்தேவிஸ்பிரேரா | 0 1 1 |
| 10 A | ஷை | கே. சிம்பாஹாமி | 0 0 7·50 |
| 11 A | ஷை | கே. நீபோஹாமியும் மற்றவரும் | 0 0 17·50 |
| 12 A | ஷை | கே. நோய்ஹாமி | 0 0 17 |
| 13 A | ஷை | ஈ. உடரிஸ் சில்வா | 0 0 7 |
| 14 A | ஷை | டபிள்யு. கிரிகோரிஸ் சில்வாவும் மற்றவரும் | 0 0 20 |
| 15 A | ஷை | ஈ. கர்னேலிஸ் சொய்சா | 0 0 30 |
| 16 A | ஷை | டபிள்யு. ஹிரவிஸ்சில்வா | 0 0 0·50 |
| | | | 1 2 37 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டியபிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1908 ம் ஞு பெப்ரவரிமாசம் 17 ந் தேதியிலன்று 12 மணிக்கு அந்த இடத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்பு கச்சேரி,
1908 ம் ஞு ஜனவரி மீ 7 ந் உ.

எல். டபிள்யு. பூத்,
அரசாட்சி ஏசண்டு.

---

[Alawattupitiya and Kabalagoda, Colombo District.]

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நீர்கொழும்பு றெயில்வேய்க்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 13,371. விவரம்—தென்னந்தோட்டம். குறிச்சி—அளவட்டுபிற்றிய.

| துண்டு. | காணியினது பெயர். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. பெ. |
|---|---|---|---|
| 1A | மடங்காஹாவத்தே | வி. கிரிஸடெருபெரேரு | 0 0 37 |
| 2A | பேவியாவத்தே | ஆர். சார்லிஸ்பீரிஸ | 0 0 11 |
| 3A | அலகாஹாவத்தே | ஆர். சார்லின்ஸபீரிசும் மற்றவரும் | 0 0 15·50 |
| 4A | பேவியாவத்தே அல்லது கோன்காஹாவத்தே | கே. மரியானுசில்வா | 0 1 6 |
| 5A | கோன்காஹாவத்தே | ஆர். சாலிஸ் பீரிசும் மற்றவரும் | 0 0 8 |
| 6A | கோன்காஹாவத்தே | கே. மரியானு சில்வாவும் மற்றவரும் | 0 1 5 |
| 7A | டுங்காயால்பிட்டனியவத்தே | ஆர். ஜி. ஜே. பீரிஸ | 0 0 16·50 |
| 8A | டுங்காயால்பிற்றனியவத்தே | ஆர். ரோமல்பீரிசும் மற்றவரும் | 0 0 16 |
| 9A | அம்பகாஹாவத்தே | ஆர். ஜி. ஜே. பீரிஸ | 0 0 12 |
| 10A | அம்பகாஹாவத்தே | ஷை | 0 0 5 |
| 11A | அம்பகாஹாவத்தே | கே. பிரான்சிசு பெர்னண்டோ | 0 0 8·50 |
| 12A | அம்பகாஹாவத்தே | ஆர். பீற்றர் பீரிஸ் | 0 0 9 |
| 13A | அம்பகாஹாவத்தே | ஆர். ஜி. ஜே. பீரிஸ் | 0 0 0·40 |
| | | விவரம்—விசாலபூமி. குறிச்சி—கபல்லகொடே. | |
| 1A | அம்பகாஹாவத்தே | ஆர். ஜி. ஜே. பீரிஸ் | 0 0 0·20 |
| | | விவரம்—தென்னந்தோட்டம். | |
| 2A | அம்பகாஹாவத்தே | ஆர். எவிசந்திரிபீரிஸ | 0 0 3·50 |
| 3A | பிட்டமுல்லவத்தே | ஆர். பபேனுபீரிஸ் | 0 0 13 |
| 4A | வெவிமுட்டவவத்தே | ஆர். பபனு பீரிஸ் | 0 1 25 |
| | | விவரம்—நெல்வயல். | |
| 5A | பிட்டமுல்லகும்புற | ஆர். எவிஸ்சந்திரிபீரிசும் மற்றவர்களும் | 0 0 2·50 |
| 6A | ரக்காஹாகும்புற | ஜே. எ. இலயஸ் சில்வாவும் மற்றவர்களும் | 0 0 15·75 |
| | | விவரம்—தென்னந்தோட்டம். | |
| 7A | வெவிமுட்டவாவத்தே | எ. எவிஸபெரேரு | 0 0 34 |
| | | | 2 1 3·85 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1908 ம் ஞு பெப்ரவரிமாசம் 17 ந் தேதியிலன்று 12 மணிக்கு அந்த இடத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1908 ம் ஞு ஜனவரி மீ 7 ந் உ.

எல். டபிள்யு. பூத்,
அரசாட்சி ஏசண்டு.

[Dimbula, Kandy District.]

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கல்லு உடைக்கிறதற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 5,766. குறிச்சி—டிம்புல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. பெ. |
|---|---|---|---|---|
| T 902 | குருஓயா தோட்டம் | தேயிலையும் கற்குளிகளும் | குட்டஓயாதோட்ட சொந்தக்காரர் | 0 0 12 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின் படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவ்வரவருடைய காரியகாரர் மூலமாய் 1908 ம் ஞு மாசிமீ 4 ந் தேதியிலன்று 1 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டி கச்சேரி,
1908 ம் ஞு தைமீ 7 ந் வ.

ஜே. பி. லூவிஸ்,
அரசாட்சி ஏசண்டு.

[Kegalla, Kegalla District.]

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பகிரங்க மார்க்கட்டு சந்தை கட்டும்படி தேவை என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 1,591. குறிச்சி—கேகாலை நகரம்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். அ. று. பே. |
|---|---|---|---|---|
| H 171 | புளுக்கும்புறை | நெல்விளையக்கூடிய சதகல நிலம் | மெஸ் எச். டிங்கிரி வண்டாவும் கிரிவண்டாவும் | 0 0 23·25 |
| I 171 | ஷை | ஷை | எச். கிரிவண்டா | 0 0 0·50 |
| J 171 | ஷை | ஷை | ஷை | 0 0 0·50 |
| K 171 | புளுக்கும்புறவத்தை | வத்தை | மெஸ் டீ. எவ். விக்கிறமசிங்க | 0 0 14 |
| L 171 | கிரிவானேவத்தை | வத்தை | மெஸ் ஜே. பி. ஜே. றற் | 0 0 24·50 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1908 ம் ஞு மாசிமீ 12 ந் தேதியிலன்று 1 மணிக்கு பின்னேரம் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலை கச்சேரி,
1908 ம் ஞு தைமீ 6 ந் வ.

ஈ. குட்டர்,
அரசாட்சி உதவி ஏசண்டு.

[Arangala, Nuwara-Eliya District.]

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கல்லுக்குளிக்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 5,765. குறிச்சி—அறன்கல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. பெ. |
|---|---|---|---|---|
| S 902 | கடபூலா தோட்டம் | தேயிலையும் கல்இடமும் | கடுபூலாதோட்டம் உரித்தாளி | 0 0 17 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1908 ம் ஞு மாசிமாசம் 5 ந் தேதியிலன்று 1 மணிக்கு நுவரெலியா கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

எவ். பார்ற்வெற்,
உதவி அரசாட்சி ஏசன்று.

நுவரெலிய கச்சேரி,
1908 ம் ஞு தைமீ 8 ந் வ.

## PRELIMINARY NOTICE, WASTE LAND SETTLEMENT.

### உரிமைபெறும் யாழ்நிலத்தின் முன்னறிவித்தலைக் குறித்த விளம்பரம்.

[Matara S. O. 1—1908.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1908 ம் ஞு ஜனவரி (தை)மீ 10 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜெ. ஷி

பெரேரா துரை அவர்களிடம் கொழும்பு முகத்துவாரம் "ஹில் ஹவுஸ்" என்னும் அவருடைய கந்தோரில் முகாமுகமா யேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாத தாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமென தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. ஜி. பெரேரா,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விபரம்.

தென் மாகாணம் மாத்துறை டிஸ்திரிக்கு கந்தபொடபத்தைச்சேர்ந்த நஞ்சாகொட என்னும் கிராமத்திலுள்ள நிலுவையிலுள்ளதும் *உறுதிப்படுத்திய படப்பிரதியில் விவரித்தபடியே, கீழ்க் குறிக்கும் காணித்துண்டு :—

பிரதம படம் 97.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். அ. ரூ. பே. |
| --- | --- | --- |
| 104c ... | பெரவாகெல்பொத்தவத்தை ... ... ... ... | 0 2 39 |

எல்லைகளாவன: வடக்கு-முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்திய நக்காகொல்லாவ; கிழக்கு-எப். தொன் அபறு க்கு முடியால் விற்கப்பட்ட பெறவாகெல்பொத்தகணத்த; தெற்கு-டபிள்யு. ஆர். வெல்லப்பிலியும் மறபேரு உரித்துப்பேசும் போலேகம்புற முதலியன, கமாகே ரேந்தே உரித்துப்பேசும் பெறவாகெல்பொத்தவத்தை; மேற்கு-எம். சுரேவிசுக்கு முடியால் விற்கப்பட்ட கேருவன்விலவத்தை, எம். தொன் அதிரியானுக்கு முடியால் விற்கப்பட்ட மீகாதே னியேகெலே.

* இங்கிலீஷின் VI. ம் பாகம் 6 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

2,920

[Supreme Court Criminal Sessions at Kalutara.]

இலங்கையிற் சங்கைபோந்த சுப்பிரீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: களுத்துறை நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிரீங் கோட்டாரால் களுத்துறை டிஸ்திரிக்கைச்சேர்ந்த கிரிமினல் வழக்குவிசாரணை, 1908 ம் ஆண்டு மாசிமாதம் 3 ந் தேதியாகிய திங்கட்கிழமை காலமே 10 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்கள் எல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்திலின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,
டி. ஒண்டாச்சி,
டெபிட்டி பிஸ்கால்.

கொழும்பு பிஸ்கால் கந்தோர்,
1908 ம் ஞு தைமீ 8 ந் தேதி.

[Supreme Court Criminal Sessions at Jaffna.]

இலங்கையில் சங்கைபோந்த சுப்பிரீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: யாழ்ப்பாணம் டிஸ்திரிக் நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிரீங் கோட்டாரால் யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கைச்சேர்ந்த கிரிமினல் வழக்குவிசாரணை, 1908 ம் ஆண்டு மாசிமாதம் 3 ந் தேதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்திலின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்
வி. தம்பிப்பிள்ளை,
பிஸ்காலுக்காக.

யாழ்ப்பாணம் பிஸ்கால் கந்தோர்
1908 ம் ஆண்டு தைமாசம் 6 ந் தேதி.

# UNOFFICIAL ANNOUNCEMENTS.

தொழிலுக்குட்பட்டவர்களின் அறிவித்தல்கள்.

[V. Sabaratnam.]

யாழ்ப்பாணம் வல்லுவெட்டித்துறை பொலிகண்டியிலிருக்கும் வயிரவநாதர் சபாரத்தினமாகிய நான் 1907 ம் ஆண்டின் முதலாமிலக்கச் சட்டத்தின் 8 ம் பிரிவின்படி மூன்று மாதங்களின்பின் யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கில் பிரசித்த நொத்தாரிசுவாகத் தமிழ்ப்பாஷையில் பணிவிடை நடத்திவர என்னை ஏற்றுக்கொள்ளும்படி திஸ்ரிக்ட் ஜெனறல் அவர்களிடம் விண்ணப்பஞ்செய்ய எண்ணியிருக்கிறேனென்பதை இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

வ. சபாரத்தினம்.

பொலிகண்டி, வல்லுவெட்டித்துறை,
யாழ்ப்பாணம், 1907 ம் ஞு மார்கழிமீ 20 ந் தேதி.

[P. K. Pedrupillai.]

யாழ்ப்பாணம் பருத்தித்துறையைச்சேர்ந்த தும்பளை பிலிப்பு கலித்தாம்பிள்ளை பேதுருப்பிள்ளையாகிய நான் 1907 ம் ஆண்டின் 1 ம் இலக்கச்சட்டத்தின் 8 ம் பிரிவின்படி யாழ்ப்பாண டிஸ்திரிக்கில் பிரசித்த நொத்தாரிசுவாகத் தமிழ்ப்பாஷையில் தொழில் நடத்த அங்கீகரிக்கும்படி மூன்று மாதங்களின்பின் றெஜிஸ்ரர் ஜெனறல் அவர்களுக்கு விண்ணப்பஞ்செய்யும் எண்ணமுடையவனாயிருக்கிறேனென்பதை விளம்பரப்படுத்துகிறேன்.

பி. க. பேதுருப்பிள்ளை.

தும்பளை, பருத்தித்துறை,
1907 ம் ஞு மார்கழிமீ 20 ந் தேதி.

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.